பென்டெமிக் இன்புளுவென்சா

நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியது

முகக் கவசத்தை தேர்ந்தெடுக்கவும் அதை பயன்படுத்துவதற்குமான வழிகாட்டிகள்.

முகக் கவச தேர்வுகள்

மாதிரி/வகை	யார் பயன்படுத்தலாம்	எப்படி பயன்படுத்துவது
அறுவை முகக்	• இன்புளுவென்சா உள்ளது என்று அடையாளம் காணப்பட்ட நோயாளி • சுகாதார பணியாளர்கள்/நோயாளிகளை பராமரிப்போர் • இன்புளுவென்சா நோயாளிகளுடன் தொடர்புடையோர் • சுவாச மண்டல நோய் அறிகுறி உள்ளவர்கள்	• முகத்தையும் மூக்கையும் முற்றாக மூடவேண்டும் • கிளிப்பை கீழே இறக்கி, மூக்கு வடிவத்தை பின்பற்றவும். • ஒரு முறை பயன்படுத்த மட்டுமே/ பயபடுத்தியவுடன் வீசி விடவும். • குப்பைத் தொட்டியில் வீசி விடவும்.
முகக் கவசம் N95 N100	• மருத்துவ,சுகாதாரப் பணியாளர்கள் குறிப்பிட்ட சில வழிமுறைகளை செயல்படுத்தும் போதும் தவறுகள் நேரும்போதும் அல்லது இன்புளுவென்சா நோயாளிகளின் எச்சில்சாரல்/நீர் சாரல் ஆகியவை படும் வாய்ப்பு இருக்கலாம். • பாதிப்பு ஏற்பட அதிகம் வாய்ப்பு உள்ள இடங்களில் வேலை செய்வோர் உதாரணத்துக்கு லெவல் 3 சோதனைக் கூடங்களிலும்,இந்த வைரஸ் பற்றிய ஆய்வில் ஈடுபடுவோரும். • தாடி வைத்திருப்போருக்கு இந்த முகக்கவசம் பொருந்தாது காரணம் அசுத்தமான காற்று முகக்கவசத்தின் உள்ளே புகும்.	 1. ரப்பர் பேன்ட் மிகவும் இருக்கமாக இல்லாமல் இருக்க 1-2 அங்குலம் இழுத்து விடவும். 2. முகக்கவசத்தை கையில் வைத்துக் கொண்டு விரல் நுனியால் கிளிப்பை பிடித்து ரப்பர் பேன்டை கைக்கு கீழே கொண்டு வரவும்.  3. முகவாய்க் கட்டையின் கீழ் கவசத்தை வைத்து வாயையும் மூக்கையும் மூடி கிளிப்பை மூக்கின் மேல் பகுதிக்கு கொண்டு வரவும்.  4. ரப்பர் பேன்டை தலைப் பக்கம் கொண்டு வந்து ஒன்றை காதுக்கு மேல் புறமும் இன்னொன்றை கீழ் புறமும் கொண்டு வந்து மாட்டவும்.  5. இரண்டு கைகளையும் கொண்டு மெட்டல் கிளிப்பை அழுத்தி மூக்கு வடிவத்துக்கு கொண்டு வரவும்.  6. முகக்கவசம் சரியான முறையில் அணியப் பட்டிருப்பதை உறுதி செய்ய கவசத்தை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஊதவும். மூக்குப் பகுதியில் காற்று வெளியாகினால் மெட்டல் கிளிப்பை இன்னும் சற்று அழுத்தி மூக்குப் பகுதியை சரியாக பிடித்துக் கொள்ளும் படி செய்யவும். முகக் கவசத்தின் இரு பக்கங்களிலும் இன்னமும் காற்று வெளியாகினால் ரப்பர் பேன்டை மூக்கின் இரு பக்கம்மும் இழுத்து இருக்கமாக்கவும்.
மூச்சுக் கருவி	• ஆபத்து அவசர வேளைகளில் சுகாதாரப் பணியாளர்களும் மற்றவரும் பயன் படுத்த மட்டுமே.	• வழிகாட்டி புத்தகத்தில் இருப்பதைப் போல் பின்பற்றவும்.

முகக் கவசத்தை எங்கே வாங்கலாம்?

முகக் கவசங்கள் பெரும்பாலான மருந்து கடைகளில் கிடைக்கின்றன.

முகக் கவசம் அணிந்துள்ள ஒருவர் செய்யக் கூடாதது என்ன?

( ) கழுத்தைச் சுற்றி அல்லது முகவாய்க் கட்டைக்கு கீழே முகக் கவசத்தை அணிவது

( ) முகக் கவசத்தை அணிந்து கொண்டு மூக்கையோ வாயையோ சொரிவது

( ) மூக்கை மூடாமல் வாய்க்கு மட்டும் முகக் கவசம் அணிவது

( ) பயன்படுத்திய முகக் கவசத்தை கவனமில்லாமல் போடுவது

முகக் கவசம் அணிவதன் முக்கிய நோக்கம் சுவாச மண்டலத்தில் இருந்து வெளியாகும் நீர்த்துளிகளால் ஏற்படும் சுற்றுப்புற தூய்மைக் கேட்டை தடுப்பதற்கே.

Utamakan Kesihatan

Sihat Sepanjang Hayat

Diterbitkan oleh:
KEMENTERIAN KESIHATAN MALAYSIA
Tel: 03-8881 0200/300
Laman Web: http://dph.gov.my/survelans/
http://www.infosihat.gov.my
PI.9 (versi 1), 12/2006 (BT 30,000)